மணி புரொடக்ஷன்ஸ்
மாமன் மகள்
டைரக்ஷன்... R.S. மணி

மணி புரொடக்ஷன்ஸ்

மாமன் மகள்

[தமிழ்]

டைரெக்ஷன் : *R. S. மணி*

★

நடிகர்கள்

கணேஷ்
T. S. துரைராஜ்
T. S. பாலையா
D. பாலசுப்ரமணியம்
சந்திரபாபு

சாவித்திரி
S. R. ஜானகி
C. K. சரஸ்வதி
(கெஸ்ட் ஆர்ட்டிஸ்ட்)
K. S. ராஜம்

மற்றும்

G. V. சர்மா
பல்ராமன்
(ஸ்டண்ட்)
வெங்கட்
கணபதி பட்
O. A. K. தேவர்
T. V. சேதுராமன்
சங்கரமூர்த்தி
கோபால்
ஈஸ்வரன்
V. K. ஆசாரி
சவுத்திரி
A. V. ராம்குமார்
S. M. சுந்தரம்

கேரள சகோதரிகள்
T. V. கல்யாணி
D. இந்திரா
பாலகுமாரி
T. S. கமலா
லக்ஷ்மி
சரஸ்வதி
சாந்தி
K. சரஸ்வதி
S. R. ருக்மணி
மோகனா
சகுந்தலா
காமினி
P. T. சரோஜினி
மீனாக்ஷி

கதை	...	மணி புரொடக்ஷன்ஸ் கதை இலாக்கா
வசனம்	...	ஸ்ரீதர்
பாடல்கள்	...	சிவன், தஞ்சை ராமய்யா தாஸ், கம்பதாசன், சுரபி, ஆத்மநாதன், சீதாராமன்
பாடியவர்கள்	...	T. M. சௌந்தரராஜன், A. M. ராஜா, ஜிக்கி, T.V. ரத்தினம், ராணி—மைதிலி கஸ்தூரி, சைலா, நிர்மலா, பத்மா, ராஜேஸ்வரி
சங்கீத டைரக்ஷன்	...	S. V. வெங்கட்ராமன்
ஒளிப்பதிவு	...	நிமாய் கோஷ்
பாடல்கள் ஒலிப்பதிவு		A. கோவிந்தசாமி
ஒலிப்பதிவு	...	S. விஸ்வநாதன்
நடன அமைப்பு	...	மாதவன் - சோப்ரா
மேக்கப்	...	A. V. ராமச்சந்திரன் - நவநீதம்
எடிட்டிங்	...	K. கோவிந்தசாமி
உடை அமைப்பு	...	மாதவன்
ஆபீஸ் நிர்வாகம்	...	S. K. மூர்த்தி - M. குப்புசாமி அய்யர்
புரொடக்ஷன் நிர்வாகம்	...	T. G. ராஜகோபால்
புராஸஸிங்	....	ஜுபிட்டர் லேபரட்டரி ராம்பாபு, M. P. எத்திராஜ்
ஸ்டுடியோ	....	நெப்டியூன்
ஸ்டில் போட்டோ	...	R. N. நாகராஜ ராவ்
விளம்பரம்	...	ஜுபிட்டர் பப்ளிசிட்டீஸ் K. மாதவன், N. நாகேஸ்வரராவ், பக்தா

ஜோடனைப் பொருள்கள்	...	சினி கிராப்ட்ஸ்
காட்சி ஜோடனை	...	S. ரெங்கசாமி

உதவியாளர்கள்

வசனம்	...	V. ராமமூர்த்தி, B.A.
எடிட்டிங்	...	M. ஜகந்நாதன்
ஒளிப்பதிவு	...	M. V. ராய் - P. தத்
ஒலிப்பதிவு	...	குப்புராவ் - T. V. குமார்
உடை அமைப்பு	...	மணி, சீனு, அழகிரிசாமி
மேக்கப்	...	பத்மநாபன், சந்தானம், சுந்தரேசன் T. ஷண்முகம்
புரொடக்ஷன்	...	D. கணேசன், S. M. சுந்தரம், பச்சை
நடனம்	...	தண்டபாணி & A. K. ரத்தன்

இசையமைப்பு அசோசியேட் டைரக்ஷன் :

T. R. ராமனுதன்

அசோசியேட் டைரக்ஷன்

T. S. C. சேகர்

உதவி ... K. B. ராமு

மாமன் மகள்

கதைச் சுருக்கம்

★

சென்னையைச் சேர்ந்த தனவந்தர் தர்மலிங்கத்தின் ஒரே ஆசை மகள் மாலதி. மிகவும் அடக்க ஒடுக்கம் உள்ளவள். தந்தையின் சொல்லை மதித்து நடக்கும் பெண் அவள்.

பல வருஷங்களுக்கு முன்பே இறந்துபோன மாலதியின் தாய், அக்குடும்பத்தைச் சேர்ந்த சகல சொத்துக்களுக்கும் சொந்தக்காரனும் சிறு வயதில் விழாவில் காணமற் போனவனு மான தன் சகோதரனைக் கண்டுபிடித்து மாலதியை அவனுக்கே மணம் முடித்துச் சொத்துக்களை ஒப்புவிக்க வேண்டும் என்று ஒரு உயிலை எழுதி வைத்துவிட்டு உயிர் நீத்தாள்.

தர்மலிங்கம் காணமற்போன மைத்துனனைக் கண்டு பிடித்து வர, தன் நண்பன் கன்னியப்பனை அனுப்புகிறார்.

கன்னியப்பனுக்கு நெடுங் காலமாகவே தர்மலிங்கத்தின் செல்வத்தின் மீது ஒரு கண். ஆகவே தர்மலிங்கத்திற்கு உதவி செய்வது போல நடித்து, அவர் சொத்தை அபகரிக்கத் திட்ட மிட்ட கன்னியப்பன் அதற்காகவே, தனது சொந்த மைத் துனனை தாண்டவனை அழைத்து வருகிறான். தர்மலிங்கத்தின் மைத்துனனைப் போல் நடிக்கச் செய்கிறான். அப்பாவியான தர்மலிங்கமும் அசட்டுத் தாண்டவனையே அசல் மைத்துனன் என்று எண்ணி மகிழ்ந்து, அவனுக்கே மாலதியை மணம் முடிக்கத் தீர்மானிக்கிறார்.

சந்திரன் பி. ஏ. படித்த வாலிபன். ஆயிரம் அல்லல்கள் பட்டு அவன் அருமைப் பாட்டி அவனைக் காப்பாற்றி வளர்த்து, படிக்க வைத்தாள். அவன் அறிவிலும் கல்வியிலும் மகா மேதைதான். ஆனால் பெண்களைக் கண்டாலே வெட்கி ஓடும் கோழைத்தனம் அவனை முன்னேறவிடாமல் தடுத்து வந்தது. அதனால் சம்பாதிக்க முடியாமல் கஷ்டப்படுகிறான்.

'காலச் சக்கரத்தின் சுழலிலே சந்திரன் மாலதிக்கு கல்வி புகட்டும் உத்தியோகத்தில் அமர்கிறான். மாலதிக்கு நாளடை

வில் அவன் மீது விவரிக்க முடியாத ஒரு அன்பு ஏற்படுகிறது. சந்திரனின் இதயத்திலும் மாலதி இடம் பெறுகிறுள். ஒருவருக் கொருவர் கொண்டிருந்த தூய்மையான அன்பைத் தந்தையிடம் சொல்லி கலியாணத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பதற் காக மாலதி ஒரு விருந்து வைத்து அதற்கு சந்திரனை அழைக்கிருள்.

ஆனால் இவர்கள் அன்பை அறிந்த கன்னியப்பன் சந்திர னின் பயந்த குணத்தை சாதகமாக்கிக்கொண்டு ஒரு சூழ்ச்சி செய்து, அதன் விளைவாக சந்திரனை வீட்டிலிருந்தே வெளி யேற்றி விடுகிருன்,

தோல்வியுடன் வீடு திரும்பிய சந்திரனை அவன் பாட்டி தேற்றி, திடம்பெறச் செய்கிருள். அவள் அவனிடம் அவன் பாட்டனுரின் மந்திரக் கவசம் ஒன்றைக் கொடுத்து அதில் நம்பிக்கை வைத்தால் எடுத்த காரியம் யாவும் வெற்றிபெறும் என உறுதியளித்து மீண்டும் தர்மலிங்கம் வீட்டிற்கே அவனை அனுப்புகிருள், வெற்றியுடன் திரும்ப.

மந்திரக் கவசத்தைப் பெற்ற சந்திரன் தன்னம்பிக்கை யுடன் மாவீரனுகத் திகழ்கிருன். தோட்டக்கார கிழவனுக மாலதி வீட்டிலேயே உத்தியோகம் பெறுகிருன்.

சந்திரன் பிரிவைத் தாங்காமல் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்த மாலதியை தக்க சமயத்தில் காப்பாற்று கிருன். நடக்கவிருந்த மாலதியின் நிச்சயதார்த்த ஏற்பாட்டை தந்திரமாக நிறுத்தி விடுகிருன்.

தர்மலிங்கம் தன் மகள் டாண்டியை மணக்க இஷ்டப்பட வில்லை என்பதை அறிந்து, தன் மகளின் சொந்த விருப்பத்திற்கு சாதகமாக உயிலை மாற்றியமைக்க விரும்புகிருர்.

திடுக்கிட்ட கன்னியப்பன் தனது மிரட்டல்களுக்கு தர்ம லிங்கம் பணியாததால் தன் காரியம் கெட்டுவிடுமென அஞ்சு கிருன். அதற்கு வேண்டிய சூழ்ச்சி செய்கிருன். மறுநாள் உயில் காணப்படவில்லை. தர்மலிங்கம் திக்பிரமை அடை கிருர்.

சந்திரன்தான் காணுமற்போன அசல் பையன் என்பதையும் 15 வருடங்களுக்குமுன் தன்னுல் கொலை செய்யப்பட்டதாக எண்ணப்பட்டிருந்த அதே பாலகன் என்பதை அறிந்த கன்னி

யப்பன் உள்ளம் குமுறுகிறான். கன்னியப்பன், உடனேயே சந்திரனை ரகசியமாக கொல்ல முடிவு செய்கிறான்.

இந்நிலையில், சந்திரன் கன்னியப்பன் இருப்பிடத்திற்கு மாறுவேடம் அணிந்து சென்று உயிலை கன்னியப்பனிடமிருந்து திருப்பிக் கொண்டு வருகிறான்.

இத்தருணத்தில் உயில் காணமையால் மனம் குழம்பிய தர்மலிங்கம் கன்னியப்பன் உதவியை நாடி அவனிடம் வருகிறார். ஆனால் கல்நெஞ்சனான கன்னியப்பன் அவரை ஓர் அறையில் கட்டிப் போட்டு மாலதி டாண்டியைத்தான் மணக்க வேண்டும் என்று இம்சிக்கிறான்.

தந்தை படும் வேதனையைப் பார்க்கச் சகியாத மாலதி அவரது உயிரைக் காப்பாற்ற வேண்டி டாண்டியை மணக்கச் சம்மதிக்கிறாள்.

இதற்கிடையில் கன்னியப்பன் ஆட்கள் தவறுதலாக சந்திரனுக்குப் பதில் டாண்டியை கட்டிப் போட்டு தூக்கிக் கொண்டு வருகிறார்கள். அப்போது டாண்டி யார் என்ற ரகசியத்தை தெரிந்துகொண்ட தர்மலிங்கம் கன்னியப்பனின் பூரா சூழ்ச்சிகளையும் அறிந்து கொள்ளுகிறார்.

இந்நிலையில், தர்மலிங்கத்தைக் காப்பாற்ற வந்த சந்திரன் மந்திரக்கவசத்தை இழந்துவிட்டதால் கன்னியப்பன் ஏவிய முரடர்களிடம் சிக்கிக்கொள்ளுகிறான்.

தர்மலிங்கத்தையும், சந்திரனையும் தீர்த்துக்கட்டிவிட உத்தரவிட்டு கன்னியப்பன் அதே நேரத்தில் மாலதிக்கும் டாண்டிக்கும் திருமணம் நடத்த அவசரமாக விரைகிறான்.

பிறகு நேர்ந்ததென்ன ?

சந்திரனும் தர்மலிங்கமும் என்னவானார்கள் ?

மாலதியின் கதி என்ன !

மந்திரக் கவசத்தின் மர்மம் யாது !

தோட்டக்கார கிழவன் யார் !

இவைகளை வெள்ளித்திரையில் கண்டு களியுங்கள் !

சுபம் ! சுபம் !! சுபம் !!!

மாமன் மகள்

★

பாட்டு 1

இயற்றியவர்: ஆத்மநாதன் பாடியது: ராணியும் மற்றவர்களும்

ஹேமா: தாஜா பண்ணுவேன் என்
ஆசை ராஜாவை டாம்பீகமாய்
வாழ்விலே ஜாலி காணவே
பாஷன் மேக்கப்பாலே
பாரிஸ் லேடிபோலே (பாஷன்)

சொகுசுப் பேச்சினாலே
சொக்கும் பியூட்டியாலே (தாஜா)

முத்தாயி: ஹேமா

ஹேமா: ஹலோ சௌக்யமா

முத்தாயி: ஆஹா...
வருகிற புதனில் உதய வேளையில்
மைந்தன் பிறந்த வைபவம்
வரவேணும் நீ வரவேணும் உன்
மாப்பிள்ளையோட வரவேணும்

ஹேமா: மஞ்சள் குங்குமம் கொடுத்தழைப்பது
உங்கள் மூடப் பழக்கம்—எங்க
மரியாதை புதுமைக் கெல்லாம்
பொருத்தமில்லா வழக்கம்

முத்தாயி: எங்க நாட்டு மரியாதை இதுதானம்மா—எனக்கு
உங்க புதுமை நாகரீகம் தெரியாதம்மா

ஹேமா: தெரியாதா......
ஆண்களுக்குப் பெண்கள் அடிமை ஆகக்கூடாது!

முத்தாயி: ஆனால் அடாங்காப் பிடாரிபோலே
தெருவில் திரியலாகுமா

ஹேமா: அடுப்படியில் சமையல் வேலை செய்யக்கூடாது

முத்தாயி: அப்போ ஆம்பிளைங்கதான்
சோறும் குழம்பும் ஆக்க வேணுமா

ஹேமா : பிள்ளை பெற்றிடும் யந்திரமாகக் கூடாது
முத்தாயி : தாய்மை பேரில்லாத மலடியாகவே இருக்க [லாகுமோ
ஹேமா : ஓ...கெட்டிங் லேட் லேட் மீ கோ டாட்டா
முத்தாயி : சரி..சரி..புதன்கிழமை பொறந்த நாளு மறந்து [போகாதே
புருஷன் : என்னுசை கண்ணுட்டி ஹேமலதா
வேலைக்காரன் : சார்
புருஷன் : உன்னை இல்லேடா அம்மா எங்கேடா
வேலைக் : ஓகோ! அவங்களா......
தாலிகட்டிய புருஷனுக்கு சேவை செய்யணும்
தத்துவத்தைப் பத்திப்பேச போயிருக்காங்க
புருஷன் : ஆமா. ஹேமா காலையிலே எங்கே [போயிருந்தா
வேலைக் : ஆல்பர்ட்டுரோஸி வீட்டு ஆண்டு விழா
புருஷன் : யாருக்கு
வேலைக் : ஜிம்மிக்கு
புருஷன் : யார் குழந்தை
வேலைக் : குழந்தையில்லீங்கோ...வப்...வப்...
புருஷன் : நாய்குட்டியா
வேலைக் : ஆமாங்க
புருஷன் : டாட்டா
வேலைக் : ஆமாங்க
புருஷன் : நிஜமா
வேலைக் : ஆமாங்க
புருஷன் : தேவுடா தேவுடா...
நாய்க்கிருக்கும் கௌரவம்கூட அட தேவுடா
எனக்கு இல்லேடா தேவுடா
எனக்கு இல்லேடா—ஹை (எனக்கு)

அஞ்சலை வீடு

அஞ்சலை : குடுத்தனத்தை நல்லபடியா நடத்துவேன்— [நான்
கொண்ட புருஷன் மனசை வசிய [படுத்துவேன்

அடக்கத்திலே ஆதிகாலப் பெண்களைப்
[போலே—குல
ஆச்சாரத்திலே விரதத்திலே அணுவளவும்
[தவறுமே
குடுத்தனத்தை நல்ல படியா நடத்துவேன்—
[நான்
கொண்ட புருஷன் மனசை வசியப்
[படுத்துவேன்

முத்தாயி : அம்மா அஞ்சலை...
வருகிற புதனில் உதய வேளையில்
மைந்தன் பிறந்த வைபவம்
வரவேணும் நீ வரவேணும் உன்
மாப்பிள்ளையோட வரவேணும்

அஞ்சலை : அம்மாசி விரதத்துக்கு
ஆச்சாரமாய் நானிருக்கேன்
அஞ்ஞானம் புடிச்சவ நீ
ஆச்சாரத்தை கெடுத்துப்புட்டே

முத்தாயி : விரதமிருப்பதெதுக்கு—

அஞ்சலை : அந்த விவரம் சொல்லுறேன் உனக்கு
சோமவார விரதத்துக்கு
சொர்க்கலோகம் இருக்குது
சுக்கிரவார விரதத்துக்கு
புத்திர பாக்யம் இருக்குது.

முத்தாயி : சரி...சரி
புதன்கிழமை பொறந்த நாளு மறந்து போகாதே

புருஷன் : ஆபீசு போகணும் வா நீ—நேரம்
ஆச்சுது சாப்பாடு போடடி ராணி—(ஆபீசு)

அஞ்சலை : பூசைகள் முடியல்லே அங்கே நீங்க கொஞ்சம்
பொறுமையாய் ஒரு நாழி உட்காந்திருங்க

புருஷன் : அடியே அஞ்சலை பசியாலே பிள்ளை
அழுவது இன்னமும் தெரியல்லயா

அஞ்சலை : பசியாலே பிள்ளை அழுவதும் தெரியுது—ஆனா
பால் கொடுக்க இப்போ நேரமில்லை

புருஷன் : ம்ஹூம்...ம்ஹூம்......

அஞ்சலை : தெய்வ பூஜை இது முடியு முன்னே
[தீண்டக்கூடாது
தீட்டுப் பட்டுப் போனா கடவுள் தெரிசனம்
[கிடைக்காது

புருஷன் : பூவாவுக்கு உடுப்பி ஹோட்டல் போறேன் [தாயே—உன்
பூஜை எல்லாம் முடிஞ்ச பிறகு வாரேன் தாயே
குட் பை...குட் பை . குட் பை...

முத்தாயி : மாசில்லா பாண்டியனே வள்ளுவனூர் திருமகனே
மாநிலத்தை ஆளவந்த மன்னவனே கண் வளராய்

அஞ்சலை, ஹேமா : முத்தம்மா...ஏ முத்தம்மா...

முத்தாயி : ஓகோ...வாங்க, வாங்க

புருஷன் : முத்தம்மா

முத்தாயி : அத்தான்

புருஷன் : கண்ணுட்டி உன் அழகு போல கழுத்துக்கேத்த [முத்துமாலை
கத்தரிப்பூ நிறத்திலே ஒரு கைத்தறிசேலை—ஜாதி
கதம்பத்திலே நாலுமுழம் வாங்கி வந்திருக்கிறேன்

முத்தாயி : ஆசை அத்தான் உங்களுக்காக அலங்காரம் [பண்ணிக்கிட்டு
அதிரசமும் பாயசமும் செஞ்சு வைச்சிருக் [கிறேன்—வரவை
ஆவலோடு எதிர் பார்த்து காத்துகிட்டிருக்கேன்

அஞ்சலை : பாத்தியாடியம்மா இந்த அதிசயத்தை

ஹேமா : முத்தம்மா வாழ்க்கையிலே அனுபவிக்கிற [சந்தோஷத்தை

அஞ்சலை, ஹேமா : அம்மா முத்தம்மா

முத்தம்மா : ஏம்மா எதுக்கம்மா அவசரமா கூப்பிடுறீங்க

அஞ்சலை : குழந்தை பிறந்த நாளாய் என்னை கொஞ்சு [வதில்லேம்மா—எங்கள்
குடுத்தனத்தில் வம்பு வழக்கு மீறிப் போச்சம்மா

ஹேமா : திருமணமாகி ரெண்டரை வருஷம் பறந்து [போச்சம்மா—ஹஸ்பென்ட்
ஒரு நாளாவது சிரிச்ச முகமாய் இருந்த [தில்லேம்மா

அஞ்சலை, ஹேமா : படிப்பு வாசனை ஏதும் இல்லா
பாவை உந்தன் பேச்சில் புருஷன்
பணிந்து வாழும் ரகசியம் என்னம்மா

முத்தாயி : ஓகோ. அதுவா...
வேலை செஞ்சு மேலலலுத்து வீடு வரும் [கண்ணாளரை
ஓடிப்போயி கூட்டி வந்து உபசரிப்பேன்

அஞ்சலை, ஹேமா : எப்படி

முத்தாயி : சிரிச்ச முகம் காட்டி கிட்டு
சேவைகள் செய்வேன்—அன்பாய்
சிங்காரமாய் பேசிப் பாடி
சந்தோஷம் கொடுப்பேன்
புருஷன் சேவை முடிஞ்ச பிறகு
பூஜை புனஸ்காரம்
புருஷன் மனசை மகிழ வைக்க
ஆடை அலங்காரம்—(புருஷ சேவை)

அஞ்சலை, ஹேமா : ஓகோ !
புத்தி வந்ததம்மா—நல்ல
புத்தி வந்ததம்மா—(புத்தி)
புருஷன் மனசு போலே நடந்தா
பூலோகம்தான் சொர்க்கம் என்னும்
புத்தி வந்ததம்மா (நல்ல)

பாட்டு 2

இயற்றியவர் : **ஆத்மநாதன்** பாடியது : **ஜிக்கி**

என்றுமிலா புது இன்ப சுழலிலே
என் மனம் சிக்கித் தவிக்குது
எண்ணாத எண்ணங்கள் எண்ணி எந்தன்
இதயவீணை ஒலிக்குது—இதயவீணை ஒலிக்குது—இது
ஏனென்று நீ சொல்லு தென்றலே
மனசை என்னவோ பண்ணுது புரியலே (ஏனென்று)
வானில் உலாவும் நிலாவுடனே
வானில் உலாவும் நிலாவுடனே
விளையாடவே ஆசை பிறக்குது
அந்த ஆசை பிறந்த மனதிலே
என்னை அறியாமல் ...என்னை அறியாமல் [வெட்கமும் வாட்டுது
ஏனென்று நீ சொல்லு தென்றலே
மனசை என்னவோ பண்ணுது புரியல்லே (ஏனென்று)

துள்ளி துள்ளி......துள்ளி
துள்ளி துள்ளி மனம் அலைமோதுது
சிலைசொல்லத் தெரியாமல் தடுமாறுது
இன்ப வெள்ளத்தில் அன்னம்போல் விளையாடுது......
[ஓ......ஓ......ஓ
இன்ப வெள்ளத்தில் அன்னம்போல் விளையாடுதே
வேதனையாகவும் உருமாறுது
ஏனென்று நீ சொல்லு தென்றலே—மனசை என்னவோ
[பண்ணுது புரியல்லே (ஏனென்று)
புதுப்புது வண்ணங்கள் பிறக்குது
புதுப்புது வண்ணங்கள் பிறக்குது
பூங்காவில் ஒரு மலர் சிரிக்குது
மதுரகானம் பாடி வந்தொரு பொன்வண்டு
மந்திரப்பொடி தூவி மயக்குது
மலரின் மதுவை பருகிட துடிக்குது
ஏனென்று நீ சொல்லு தென்றலே (ஏனென்று)

பாட்டு 3

இயற்றியவர்: **சீதாராமன்** பாடியது: **துரைராஜ், சந்திரபாபு**

கோவா மாம்பழமே மல்
கோவா மாம்பழமே
மச்சுவீட்டில் காய்ச்சிருக்கும்
மல் கோவா மாம்பழமே
பச்சைக் கிளி கொத்தாத
மல் கோவா மாம்பழமே
ஜில்லாவெங்கும் குல்லாபோடும்
பலே கில்லாடி உன்னைத்
தேடி வந்தேன் தில்லாலக்கடி
சிங்காரலேடி சமக்கு சிங்காரலேடி
பட்டு பட்டு என வெட்டிகிட்டு
எட்டி எட்டி என்னைப் பார்த்துக்கிட்டு
படக் கண்ணுடியைப் பேத்துகிட்டு
சும்மா சிக்சிக் பம்சிக் பம்சிக் போட்டுகிட்டு
குதிச்சு நீ வாடி வெளியே குதிச்சு நீ வாடி
ஆ........ஆ........ஆ........
மினுக்கு சடையும் குலுக்கு இடையும்
சிலுக்கு உடையும் தளுக்கு நடையும்

என்னே புடிச்சி மயக்கி புடிச்சி
உன்னே நினச்சி கிறுக்கு புடிச்சி
புலம்பரேனே அப்போ புடிச்சி
மானே தேனே கண்ணே பொண்ணே வா
கோவா மாம்பழமே மல்
கோவா மாம்பழமே
மச்சு வீட்டில் காய்ச்சிருக்கும்
மல் கோவா மாம்பழமே
பச்சைக் கிளி கொத்தாத
மல் கோவா மாம்பழமே (மல்கோவா)

பாட்டு 4

இயற்றியது: ராமய்யா தாஸ் பாடியது: ஜிக்கி

மண்ணும் விண்ணும் ரகசியம் பேசுவது எதனாலே, [அது மரத்தினாலே
கண்ணும் கண்ணும் ரகசியம் பேசுவது எதனாலே—அந்த
அதிசயமான ரகசியம் ஒண்ணு அவசியம் தெரிஞ்சுகணும்
அதக்கு அர்த்தமும் புரிஞ்சுகணும்
அழகான காதல் காவியம் சொல்லிக் கொடுத்தால் [போதுமா
அதுக்காக இனிமேல் வேறு பள்ளிக்கூடந்தான் [போகணுமா
அழகான காதல் காவியம் சொல்லிக் கொடுத்தால் [போதுமா
அதுக்காக இனிமேல் வேறு பள்ளிக்கூடந்தான் [போகணுமா
ஆந்தை போலே அப்படி இப்படி அரண்டு மிரண்டு [பார்க்கணுமா
ஆந்தே போலே அப்படி இப்படி அரண்டு மிரண்டு [பார்க்கணுமா
ஆசையாகப் பேசிட வந்தால் அங்கேயும் இங்கேயும் [பதுங்கணுமா
ஆசையாகப் பேசிட வந்தால் அங்கேயும் இங்கேயும் [பார்க்கணுமா
அதிசயமான ரகசியம் ஒண்ணு அவசியம் தெரிஞ்சுகணும்
அதுக்கு அர்த்தமும் புரிஞ்சுகணும்
வேதாந்த ஞானிகள்கூட விளங்கிக்கொள்ள முடியாது
விஞ்ஞான நிபுணரும் வந்து விளக்கஞ்சொல்ல முடியாது

ஏமாந்திடாமல் யோஜிக்கணும் எல்லாம் தன்னால்
[விளங்கிடும் (ஏமாந்திடாமல்)
என்னங்க சார் நீங்க இன்னும் அறியாப்பிள்ளையா சரிதான்
[போங்க
அதிசயமான ரகசியம் ஒண்ணு அவசியம் தெரிஞ்சுகணும்
அதுக்கு அர்த்தமும் புரிஞ்சுகணும்.

பாட்டு 5

இயற்றியது: சுரபி பாடியது: சௌந்தரராஜன்

நெஞ்சிலே உரமிருந்தால் நேர்மை குணமிருந்தால்
வஞ்சத்தை வென்றிடலாம் வையகத்தை ஆட்டிடலாம்
தலை நிமிர்ந்து நில்லடா
சஞ்சலத்தை வெல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா
சஞ்சலத்தை வெல்லடா
தரணி எங்கும் நிகர் உனக்கு இல்லை என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா
சக்தி உண்டு கையிலே
சாரம் உண்டு நெஞ்சிலே
நித்தம் உண்டு வெற்றி இந்த வாழ்விலே
நித்தம் உண்டு வெற்றி இந்த வாழ்விலே—பயம்
நீங்கினாலே தோல்வி ஏது பாரிலே—பயம்
நீங்கினாலே தோல்வி ஏது பாரிலே
தலை நிமிர்ந்து நில்லடா
சஞ்சலத்தை வெல்லடா
தரணி எங்கும் நிகர் உனக்கு இல்லை என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா
எண்ணி எண்ணி அழுபவனை ஏமாற்றும் பாழ் விதியே
கண் திறந்து நிற்பவனை கை கொடுத்து தூக்குமடா
தலை நிமிர்ந்து நில்லடா
சஞ்சலத்தை வெல்லடா
தரணி எங்கும் நிகர் உனக்கு இல்லை என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா
உள்ளம் தன்னிலே உறுதியானதே
வெள்ளமாகப் பொங்கினாலே
பள்ளம் எல்லாம் மேடாகப் போகுமடா

பாலைவனம் சோலையாக மாறுமடா
தலை நிமிர்ந்து நில்லடா
சஞ்சலத்தை வெல்லடா
தரணி எங்கும் நிகர் உனக்கு இல்லை என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா

பாட்டு 6

இயற்றியவர்: பாபநாசம் சிவன்
பாடியது: டி. வி. ரத்தினம்

தேவி............தேவி நீயே துணை
தேவி நீயே துணை—அம்பா
தேவி நீயே துணை—தென்
மதுரை வாழ் மீனலோசனி
மதுரை வாழ் மீனலோசனி
தேவி நீயே துணை
தேவாதிதேவன் சுந்தரேசன்
சித்தம் கவர் புவன சுந்தரி அம்பா
தேவி நீயே துணை—தென்
மதுரை வாழ் மீன லோசனி
தேவி நீயே துணை
பாவை என் மன நிலை நீ அறிவாய்
பழுதிலா என் காதல் உறுதியும் அறிவாய்
பகட்டிலே பொற் குவியலிலே எந்தன் மனத்தின்
நாட்டம் கனவிலுமில்லை
தெய்வீக பிரேமையுடன்...ஆ...ஆ...தெய்வீக பிரேமையுடன்
நற்குணம் நிறைந்த தெய்வீக பிரேமையுடன்
நற்குணம் நிறைந்த மணாளனுடன் வாழ்வெல்லாம்
அன்பு மலர்ந்த இன்ப மணம் கமழ
இரங்கி அருள் புரிவாய் அம்மா
தேவி நீயே துணை—தென்
மதுரை வாழ் மீனலோசனி

பாட்டு 7

இயற்றியவர் ; ராமய்யாதாஸ் பாடியவர் : ஏ. எம். ராஜா

மலரும் மணமும் இணைபிரியாதது எதனாலே, அது இயற்கை
[அன்பினாலே
மணமும் மனமும் மகிழப்போவது எதனாலே—அந்த
அதிசயமான ரகசியம் ஒண்ணு அவசியம் தெரிஞ்சிக்கணும்
அதுக்கு அர்த்தமும் புரிஞ்சிக்கணும்
அதுக்கு அர்த்தமும் புரிஞ்சிக்கணும்
அழகான காவியமெல்லாம் படித்திருந்தால் போதுமா
ஆடாத ஓவியம்போல் அசந்து நிற்பது ஞாயமா
ஆந்தே போல அப்படி இப்படி அரண்டு மிரண்டு
[பார்க்கணுமா
ஆசையாகப் பேசிட வந்தா அங்கேயும் இங்கேயும்
[பார்க்கணுமா
அதிசயமான ரகசியமொன்று அவசியம் தெரிஞ்சிக்கணும்
அதற்கு அர்த்தமும் புரிஞ்சிக்கணும்
வேதாந்த ஞானிகள்கூட விளங்கி கொள்ள முடியாது
விஞ்ஞான நிபுணரும் வந்து விளக்கம் சொல்ல முடியாது
ஏமாந்திடாமல் யோசிக்கணும் எல்லாம் தன்னால் விளங்கிவிடும்
இனிமேலே நீயும் ஏதும் அறியாப் பெண்ணாய் இருந்திடலாமா
இனிமேலே நீயும் அறியாப் பெண்ணா இருந்திடலாமா
அதிசயமான இரகசியம் ஒண்ணு அவ்சியம் தெரிஞ்சிக்கணும்
அதுக்கு அர்த்தமும் புரிஞ்சிக்கணும்.

பாட்டு 8

இயற்றியவர் : கம்பதாசன் · பாடியது : ஜிக்கி

ஆசை நிலா சென்றதே
அபலைக் கண்ணீரில் நீந்தியே
ஆசை நிலா சென்றதே

வண்ண ரோஜா சூடிடும் முன்னே
வஞ்சக முள்ளும் பாய்ந்ததே
வஞ்சக முள்ளும் பாய்ந்ததே
இன்பம் தந்த நினைவின் அலைகள்
எறியும் வேல் போல் வாட்டுதே
ஆசை நிலா சென்றதே
அபலைக் கண்ணீரில் நீந்தியே
ஆசை நிலா சென்றதே
பொன் விளக்கேற்றி பூஜிக்கும்போது
மின் இடி புயலும் தாக்குதே
பொன் விளக்கேற்றி பூஜிக்கும்போது
மின் இடி புயலும் தாக்குதே
கன்னி எந்தன் கண்ணைக் குருடாக்கி
துன்பக்கடல் தன்னில் ஆழ்த்துதே
ஆசை நிலா சென்றதே
அபலைக் கண்ணீரில் நீந்தியே (ஆசை நிலா)

ஞானோதயா பிரஸ், 11, ஆண்டர்ஸன் தெரு, சென்னை-1

பாட்டு 3 A

இயற்றியவர் : **சீதாராமன்**   பாடியது : **துரைராஜ், சந்திரபாபு**

விஞ்ஞானம் : சிண்டு தட்டி முடிஞ்சிகிட்டு
சீட்டாடி தோத்துபுட்டு
உண்டக் கட்டிக்குத் தாளம்போட்ட
[சிங்கமே—சும்மா
கிண்ணாரம் கொட்டிகிட்டு
புண்ணாக்கு தின்னுபுட்டு
திண்ணையிலே தூங்கி வந்த சிங்கமே—தெரு
திண்ணையிலே தூ.........

டாண்டி : ஒன் டு திரி போரு
பை சிக்ஸ் செவன் எயிட்டு
நண்டு வந்து நரி கிட்டதான்
சொல்லி கிச்சாம் குட் நைட்
அங்கே நாத்தியும் மதனியுமா
போடுருளே லெப்ட் ரைட்
போடுருளே லெப்ட் ரைட்
போடுருளே லெப்ட் ரைட்
கோவா மாம்பழமே - ம் ஹூம் -
நண்டு வந்து நரி கிட்டதான்
சொல்லி கிச்சாம் குட் நைட்

விஞ்ஞானம் : அடியேனும் ஆடிருக்கேன்
ஆட்டத்தையும் பாத்திருக்கேன்
அய்யாவின் ஆட்டம் போல
அம்மாடி நான் கண்டதில்லை
சபாலக்கிடி கிரி கிரி
சாப்பிட்டு பாரு வடகறி—ஹை
சபாலக்கிடி கிரி கிரி
சாப்பிட்டு பாரு வடகறி

———

விரைவில்

?

எங்கள் அடுத்த தயாரிப்பை

எதிர்பாருங்கள்!

☆

டைரக்ஷன் :—R. S. மணி